பெருநகர சென்னை மாநகராட்சி
செய்தி வெளியீடு

செ.வெ.எண். 20 நாள்: 23.02.2017

## <u>தியாகராய நகர் நடைபாதை அமைக்கும் பணிக்கான</u>
## <u>இரண்டாவது ஒத்திகை நடைபெறவுள்ளது.</u>

பெருநகர சென்னை மாநகராட்சி, தியாகராய சாலை (பாண்டி பஜார்)ல் நடைபாதை வளாகம் அமைக்கும் பணிக்கான வடிவமைக்கும் பணி நடைபெறுகிறது. இப்பணியினை மேற்கொள்ளும் பொருட்டு சோதனை முயற்சியாக, முதன்முறையாக போக்குவரத்து மாற்றம் தியாகராய சாலையில், பாஷ்யம் தெரு (பனகல் பூங்கா) முதல் டாக்டர். நாயர் தெரு சந்திப்பு வரை போக்குவரத்து மாற்றம் 20.11.2016 அன்று காலை 9 மணி முதல் 12.30 மணி வரை மேற்கொள்ளப்பட்டது. அதன் தொடர்ச்சியாக இரண்டாவது முறையாக சோதனை போக்குவரத்து மாற்றம் 25.02.2017 சனிக்கிழமை, காலை 8 மணி முதல் மாலை 5 மணி வரை செய்யப்படவுள்ளது.

<u>**பாஷ்யம் தெருவிலிருந்து (பனகல் பூங்கா) தியாகராய சாலை ( பாண்டி பஜார்) வழியாக அண்ணா சாலை செல்லும் வாகனங்கள்:**</u>

- **பேருந்துகள்** மற்றும் **இரு சக்கர வாகனங்கள்** மட்டும் இச்சாலையில் **வழக்கம் போல் செல்ல அனுமதிக்கப்படும்.**
- கார், ஆட்டோ ரிக்ஷா, வேன், ஷேர் ஆட்டோ மற்றும் கனரக வாகனங்கள் மாற்றுப் பாதையாக G.N.செட்டி சாலை, டாக்டர் நாயர் சாலை வழியாக அண்ணா சாலையை அடைய வேண்டும்.

<u>**அண்ணா சாலையிலிருந்து தியாகராய சாலை (பாண்டி பஜார்) வழியாக பாஷ்யம் தெரு செல்லும் வாகனங்கள்:**</u>

- பேருந்துகள் மற்றும் இருசக்கர வாகனங்கள் மட்டும் இச்சாலையில் வழக்கம் போல் செல்ல அனுமதிக்கப்படும்.
- கார், ஆட்டோ ரிக்ஷா, வேன், ஷேர் ஆட்டோ மற்றும் கனரக வாகனங்கள் மாற்றுப் பாதையாக தணிகாச்சலம் தெருவிலிருந்து வெங்கடநாராயணா சாலை வழியாக பாஷ்யம் தெருவை அடைய வேண்டும்.
- G.N.செட்டி தெரு மற்றும் வெங்கடநாராயணா சாலையிலிருந்து தியாகராய சாலையை கடக்கும் உட்புற சாலைகளான இராஜ மன்னார் தெரு, கமலாபாய் தெரு, முத்துக்கிருஷ்ணன் தெரு, நானா தெரு, சிவஞானம் தெரு, தீனதாயளு தெரு, சுந்தரம் தெரு, சிவப்பிரகாசம் தெரு, கண்ணதாசன் தெரு, பகவந்தம் தெரு மற்றும் ராஜா தெருவின் போக்குவரத்து நிறுத்தப்படும்.
- மேற்கண்ட பகுதியில் வசிக்கும் பொதுமக்களின் வாகனங்கள் மட்டும் உட்புற சாலைகளில் செல்ல அனுமதிக்கப்படும்.

## வாகனங்கள் நிறுத்துமிடம் (Alternate Parking Plan):

பாஷ்யம் தெருவிலிருந்து தியாகராய சாலை செல்லும் கார்கள் பனகல் பூங்காவின் முன் உள்ள வாகன நிறுத்துமிடம் மற்றும் பிரகாசம் சாலையிலுள்ள சென்னை நடுநிலைப்பள்ளி மைதானம் ஆகிய இடங்களில் நிறுத்தப்படவேண்டும்.

அண்ணா சாலையிலிருந்து தியாகராய சாலை செல்லும் கார்கள் அண்ணா சாலை மற்றும் தணிகாச்சலம் சாலை சந்திப்பு வரை உள்ள இடங்களின் இருபுறமும் நிறுத்தப்பட வேண்டும்.

## இருசக்கர வாகனங்கள் நிறுத்துமிடம்:

- பிரகாசம் சாலை, கோமதி நாராயணன் சாலை (G. N Chetty Road) வழியாக தியாகராய நகருக்கு வரும் வாகனங்கள் பிரகாசம் சாலையில் உள்ள சென்னை நடுநிலைப்பள்ளி மைதானத்தில் நிறுத்த அனுமதிக்கப்படும்.

- அண்ணாசாலை, தணிகாச்சலம் சாலை, டாக்டர் நாயர் சாலை வழியாக தியாகராய நகருக்கு வரும் வாகனங்கள் பலஅடுக்கு வாகனம் நிறுத்துமிடம் (இந்துஸ்தான் பெட்ரோலியம் பங்க் எதிரில்) அமையவுள்ள காலியிடத்தில் வாகனங்கள் நிறுத்த அனுமதிக்கப்படும்.

- போக் சாலை, டாக்டர் நாயர் சாலைக்கு இடையில் உள்ள தியாகராய சாலையோர வாகனம் நிறுத்துமிடத்தில் அனுமதிக்கப்படும்.

## பேட்டரி கார்:

வயதானவர்கள், குழந்தைகள், கர்ப்பிணி பெண்கள் மற்றும் மாற்றுத்திறனாளிகள் தியாகராய நகர் நடைபாதை வளாகத்தில் அமைந்துள்ள வணிக நிறுவனங்களுக்கு பேட்டரி கார் மூலம் செல்ல ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

பாதசாரிகள் மற்றும் பொருட்கள் வாங்க வரும் பொதுமக்களை ஊக்கப்படுத்திட உடல்நிலம் குறித்த விழிப்புணர்வு நிகழ்ச்சிகள், சிறுவர்களுக்கு ஸ்மார்ட் சிட்டி பற்றிய ஓவியப்போட்டியும், சிறு விளையாட்டு போட்டிகளும் நடத்தப்படவுள்ளது.

இச்சோதனை ஓட்டத்தில் சேகரிக்கப்படும் விவரங்களைக் கொண்டு நடைபாதை வளாகம் வடிவமைக்கப்படும்.

**செய்தி வெளியீடு : துணை இயக்குநர்/மக்கள் தொடர்பு அலுவலர்,**
**பெருநகர சென்னை மாநகராட்சி**